**14.02.2020**

**பத்திரிக்கை செய்தி**

**மெட்ரோ இரயில் நிலையங்களில் இசை மற்றும் கலை நிகழ்ச்சிகள்**

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், தமிழ் கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தை கொண்டாடுவதன் ஒரு பகுதியாக, சென்னை முழுவதும் உள்ள பல்வேறு இசைக் கலைஞர்கள் மற்றும் அமைப்புகளுடன் இணைந்து சென்னை மக்களுக்கு தமிழ் கலாச்சாரத்தின் இசை மற்றும் கலை நிகழ்ச்சிகளை வழங்கி வருகிறது.

இதன் தொடர்ச்சியாக, மெட்ரோ நிலையங்களில் பின்வரும் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன

| **தேதி** | **நேரம்** | **இடம்** | **கலைகுழுவின் பெயர்** |
|---|---|---|---|
| 15.02.2020 | மாலை 5 மணி | சென்ட்ரல் மெட்ரோ முதல் விமான நிலைய மெட்ரோ வரை மெட்ரோ இரயிலில் | ஆன் தி ஸ்டீரிட் ஆப் சென்னை |
| 16.02.2020 | மாலை 6.30 மணி முதல் 8.30 மணி வரை | சென்ட்ரல் மெட்ரோ (தெரு நிலை) | ஆன் தி ஸ்டீரிட் ஆப் சென்னை |

இதைத் தவிர, சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் ஸ்ரீ சத்ய சாய் சேவா அமைப்புடன் இணைந்து 16.02.2020 (ஞாயிற்றுக்கிழமை) அன்று இரண்டு நிகழ்ச்சிகளை நடத்தவுள்ளது:

1. சென்ட்ரல் மெட்ரோ இரயில் நிலையத்தில் காலை 10:30 முதல் மதியம் 12:30 மணி வரை ஒன்பதாம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு (ஆங்கிலம் மற்றும் தமிழ் வழிக் கல்வி) இலவச பல தேர்வு கேள்வி அடிப்படையிலான போட்டி,
2. பாலா விகாஸ் நாடகம் - இது பாலா விகாஸின் மாணவர்களால் நிகழ்த்தப்படுகிறது. இந்த நாடகம், சமூக விழிப்புணர்வு மற்றும் ஒரு குடிமகனின் பொறுப்பு ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது. இந்நிகழ்ச்சி வடபழனி மெட்ரோ இரயில் நிலையத்தில் மாலை 4 மணி முதல் மாலை 6 மணி வரை நடைபெறுகிறது.